<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 240/2010</u>

பெயர் : செல்வராஜ்
சாட்சி – வா.சா–1 நாள்: 04.03.2026

---

**<u>குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)</u>**

1. நான் டீ விநியோகம் செய்யும் தொழில் கடந்த 15 வருடங்களாக செய்கிறேன். நான் எனது நிரூபன வாக்குமூலத்தில் நான் விவசாயம் செய்துவருவதாக சொல்லியிருந்தால் அது உண்மை அல்ல என்றால் சரிதான். நான் முன்பு விவசாயம் செய்தேன். எனது அம்மாவின் பெயர் கண்ணம்மாள். எனது அப்பாவின் பெயர் முருகசாமி ஆகும். எனது அம்மா கண்ணம்மாள் முருகசாமியின் 2வது மனைவி என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வா.சா.ஆ.1 நீதிமன்ற தீர்ப்பின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்துள்ளேன்.

2. முருகசாமியின் முதல் மனைவி எப்போது, எங்குவைத்து இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. முருகசாமி கண்ணம்மாளை எந்த தேதியில் எங்கு வைத்து திருமணம் செய்து கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. முருகசாமி மற்றும் கண்ணம்மாள் இருவரும் திருமணம் செய்து கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கண்ணம்மாள் இறக்கும் பொழுது எனக்கு 35 வயது இருக்கும். கண்ணம்மாள் இறக்கும் பொழுது அவருடைய வயது என்ன என்று எனக்கு தெரியாது. அவரது இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன்.

3. முருகசாமி இறக்கும் பொழுது அவருக்கு சுமார் 85 வயது இருக்கும். வா.சா.ஆ.1 தீர்ப்பின் சான்றிட்ட நகல் மூலமாக கண்ணம்மாளுக்கு நான் மட்டுமே வாரிசு என்று தான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அ.வ.எண்.290/2006 வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியில் முருகசாமி உயிருடன் தான் இருந்தார். மேற்படி வழக்கில் முருகசாமியை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முருகசாமி கண்ணம்மாளின் கணவராக இருந்திருக்கும் பட்சத்தில்

நான் மேற்படி வழக்கில் அவரையும் ஒரு தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவர் கணவர் இல்லை என்பதால் தான் அவரை சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.290/2006 வழக்கில் கண்ணம்மாளின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேன்.

4. இதனால் வரை என்னை முருகசாமியின் வாரிசாக விளம்புகை செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி எனது எந்த முன்னோருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனது அப்பாவின் அப்பா நஞ்சப்ப கவுண்டருக்கு சொத்து ஒதுக்கப்பட்டது. அவருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணத்தின் அடிப்படையில் முருகசாமி மற்றும் அவரது சகோதரர் வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் முருகசாமிக்கு 10 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி முருகசாமிக்கு 10 எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றும், நான் வழக்கின் விவரம் எதுவும் தெரியாமலேயே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், தாவா சொத்துக்களுக்கும் சம்மந்தம் இலலை என்பதால் தான் முருகசாமிக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் முருசகாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அவர் தனது தனிப்பட்ட சொத்தாக தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. முருகசாமிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்தினை அவர் தனது வாரிசுகளுக்கு கடந்த 2004 ம் ஆண்டே செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாமல் செய்துகொடுத்துள்ளார்.

6. மேற்படி 2004 ம் ஆண்டு முருகசாமி எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 1 முதல் 4 பிரதிவாதிகள் பகுதி சொத்தை 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாமல் விற்றுள்ளார்கள். நான் எந்த காலத்திலும் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. முருகசாமிக்கு எந்தெந்த காலைகளில் எவ்வளவு

சொத்து பாத்தியம் என்றால் க.ச.276/1 காலையில் 57 செண்ட், க.ச.276/2 காலையில் 63 செண்ட், க.ச.276/2 காலையில் 1.20 ஏக்கர், க.ச.339 காலையில் 3.80 ஏக்கர், மற்றொரு காலையில் 83 செண்ட் பாத்தியம். நான் சொல்வது தவறு என்றும், உண்மையாவே நான் சொத்தின் சுவாதீனத்தில் இருந்திருந்தால் எந்தெந்த காலையில் எவ்வளவு பாத்தியம் என்று எனக்கு தெரிந்திருக்கும் என்றும், நான் சுவாதீனத்தில் இல்லாததால் தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

7. நான் முருகசாமியுடன் அவரது இறப்பு காலம் வரை அவருடன் தான் சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. எந்த தேதியில் பிரதிவாதிகளை அணுகி பாகம் பிரித்து கொடுக்க கேட்டேன் என்றால் தேதி நினைவில் இல்லை. நான் பிரதிவாதிகளை எந்த காலத்திலும் அணுகி பாகம் பிரித்துக்கொடுக்க கேட்டதே கிடையாது என்றால் சரியல்ல. பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என்று பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்படி அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த அறிவிப்பையும் அனுப்பவில்லை என்றும் அனுப்பியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

8. கடந்த 09.08.2010 தேதியில் சொத்தினை 3ம் நபர்களுக்கு மாற்றம் செய்ய முற்பட்டனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தான செட்டில்மெண்ட் எழுதிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஆவது செட்டில்மெண்ட் எழுதி விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையிலேயே அவரது தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவண்ததை பற்றி தெரிவித்துள்ளார் என்றும், நான் வழக்கிற்காக தெரிந்து கொள்ள வில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. முருகசாமி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் பற்றி தெரிந்த பின்னராவது அவை செல்லாது என்று விளம்புகை செய்ய பரிகாரம் எதுவும்

கோரியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 பாகப்பிரிவினைக்கு முன்னரோ அல்லது பின்னரோ முருகசாமி மற்றும் அவரது சகோதரர் ஏதேனும் சொத்துக்களை விற்றுள்ளார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது அம்மா எந்த முகவரியில் இறந்தார் என்றால் தாவா சொத்தில் தான் இறந்தார். முருகசாமியும் தாவா சொத்தில் தான் இறந்தார்.

10. எனது அம்மா தாவா சொத்தில் தான் இறந்தார் என்பதற்கு எந்த அடிப்படை ஆவணமும் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தவறான விவரங்களை கொடுத்து வா.சா.ஆ.1 தீர்ப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. முருசாமிக்கு சுப்பிரமணியம் என்ற ஒரு மகன் உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முருகசாமிக்கு சுப்பிரமணியம் என்ற மகன் உள்ளார் என்றும், நான் சொல்வது போல் நான் முருகசாமியின் வாரிசாக இருக்கும் பட்சத்தில் அதைப்பற்றி எனக்கு தெரிந்திருக்கும் என்றும், அவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

11. முருகசாமியின் மகள்கள் மாராத்தாள் மற்றும் முன்னாத்தாள் ஆகியோர்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. முருகசாமியின் மகன் சின்னசாமி எந்த தேதியில் இறந்தார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சின்னசாமியின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் நான் முருகசாமியின் வாரிசாக இருக்கும் பட்சத்தில் சின்னசாமியின் இறந்த தேதி எனக்கு தெரிந்திருக்கும் என்றும், நான் அதனை வழக்கில் குறிப்பிட்டிருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

12. நான் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக காண்பிப்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 01.06.1971 தேதியில் பிறந்தேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள முகவரியில் 2007ம் ஆண்டு முதல் வசித்து வருகிறேன். நான் சொல்வது போல் முருகசாமி மற்றும் தாவா சொத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும்

கிடையாது என்றும், பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கினை 6, 7, 8 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முருகசாமி அவர் உயிருடன் இருக்கும் போதே அவரது வாரிசுகளுக்கிடையே பிரச்சனை எதுவும் வரக்கூடாது என்பதற்காக அவரே சொத்துக்களை செட்டில்மெண்ட் செய்து வைத்துவிட்டார் என்றும், அதனை தெரியாமல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (7, 8 பிரதிவாதிகள் தரப்பு)</u>

1. தாவா சொத்து எனது அப்பா முருசாமியின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். 6 மற்றும் 7 பிரதிவாதிகள் இருவரும் எனது தகப்பனார் முருகசாமியின் மூத்த தாரத்திற்கு பிறந்த மகள்கள் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி காலமான பின்னர் அவருக்கு 8ம் பிரதிவாதி மட்டுமே ஒரே வாரிசு என்றால் சரிதான். முருகசாமியின் முதல் தாரம் இறந்த பின்னர் எனது அம்மா கண்ணம்மாளை முருகசாமி இரண்டாவதாக நடுப்பாளையத்தில் வைத்து திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் நடுப்பாளையத்திற்கும் இடையே சுமார் 25 கிமீ இருக்கும்.

2. நானும் எனது தாயாரும் முருகசாமியுடன் சேர்ந்து தாவா சொத்தில் ஒரு வீட்டிலும், பிரதிவாதிகள் தாவா சொத்தில் தனியே ஒரு வீட்டிலும், வசித்து வந்தோம். எங்கள் ஜீவனத்திற்கு தாவா சொத்தின் ஒரு பகுதியில் விவசாயம் செய்து வந்த வருமானம் தான் ஆகும். அதனுடன் சேர்த்து நான் தறிகுடோனுக்கு வேலைக்கு செல்வேன். எனக்கும் பிரதிவாதிகளுக்கு ஆரம்பத்தில் பேச்சுவார்த்தை இருந்தது. முருகசாமியின் முதல் மனைவியின் 3வது மகனான சின்னசாமியின் திருமணத்திற்கு நான் எனது அப்பா மற்றும் எனது அம்மாவுடன் சென்றேன். அப்போது எனது வயது என்ன என்று நினைவில் இல்லை.

3. எனது தாயாரின் இறப்பிற்கு முருகசாமியின் முதல் மனைவியின் மகன்கள் மூவரும் வந்திருந்தார்கள். எனது தாயார் இறந்த பின்னர் எனது தந்தை என்னுடன் தான் இருந்தார் நான் தான் அவரை பார்த்துக்கொண்டேன். எனக்கு 16, 17 வயது வரை பார்த்துக்கொண்டேன் அதன் பின்னர் எனது அம்மாவின் பெற்றோர் வீட்டிற்கு சென்று

விட்டேன். எனது அப்பா அவரது முதல் தாரத்து மகன்களுடன் இருந்தார். நான் அவ்வப்போது வந்து பார்த்து செல்வேன். பூர்வீக சொத்தை பொறுத்து முருகசாமி அவரது முதல் தார மகன்களுக்கு எழுதிவைத்தது செல்லாது என்றாலும், 6, 7 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.04 18:12:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.